**ஈரோடு மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களின் நடவடிக்கைகள்**
**பிறப்பிப்பவர் : திரு. சு. சாந்த குமார், பி.இ.,**

ந.க.14350/2024/அ4

நாள்: 14.10.2024.

பொருள்: நேரடி நியமனம் - தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் - ஒருங்கிணைந்த சார்நிலைப் பணிகள் தேர்வு - II (நேர்காணல் அல்லாத பணியிடங்கள்) (தொகுதி-IIA பணிகள்) 2022 ஆம் ஆண்டிற்கு தேர்வு செய்யப்பட்டது - ஈரோடு மாவட்ட வருவாய் அலகிற்கு 01 நேரடி நியமன உதவியாளர் ஒதுக்கீடு செய்யப்பட்டது - கனிமொழி. (திருமதி). எஸ் என்பவருக்கு முதுநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் பணி ஒதுக்கீடு செய்யப்பட்டது - முதுநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் பணி வரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

பார்வை:
1. செயலர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை அவர்களின் கடிதம் எண்.997/PSD-A2/2024, நாள்:14.06.2024
2. மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களின் செயல்முறைகள் ந.க. 14350/2024/அ4, நாள் : 09.07.2024
3. கோபிசெட்டிபாளையம் வருவாய் வட்டாட்சியரின் கடிதம் ந.க.4004/2024/அ2, நாள்: 10.09.2024.

********

**ஆணை:**

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலம் ஒருங்கிணைந்த சார்நிலைப்பணிகள் II (நேர்காணல் அல்லாத பணியிடங்கள்)(தொகுதி-IIA பணிகள்) 2022 ஆம் ஆண்டிற்கு தேர்வு செய்யப்பட்டு, பார்வை 01 -இல் காணும் கடிதத்தின்படி, ஈரோடு மாவட்ட வருவாய் அலகிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நேரடி நியமன உதவியாளர் திருமதி. எஸ்.கனிமொழி என்பவருக்கு தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணிகள் விதிகளின் விதி 23(a)(i)-ன் கீழ் முதுநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள தேதியில் பணி வரன்முறை செய்து இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

| வ. எண். | பெயர் மற்றும் அலுவலகம் | பணியில் சேர்ந்த நாள் | பணி வரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|
| 1. | திருமதி. எஸ்.கனிமொழி,<br>முதுநிலை வருவாய் ஆய்வாளர்,<br>வட்டாட்சியர் அலுவலகம்,<br>கோபிசெட்டிபாளையம். | 16.07.2024<br>முற்பகல் | 16.07.2024.<br>முற்பகல் |

02). மேற்காணும் பணிவரன்முறை ஆணை பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டது.

**'The Regularization is subject to the outcome of W.A.(MD) No.181 of 2023 & C.M.P (MD) No.2247 of 2023 pending before the Hon'ble Madurai Bench of Madras High Court and other cases if any pending on the files of the Hon'ble High Court of Madras / Madurai Bench of Madras High Court relating to this recruitment".**

03). மேற்கண்ட முதுநிலை வருவாய் ஆய்வாளரின் பணிவரன்முறை செய்யப்பட்டதற்கான விபரத்தினை தனியரது பணிப்பதிவேட்டில் பதிவு செய்து அதன் நகலினை இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கோபிசெட்டிபாளையம் வருவாய் வட்டாட்சியர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும், பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து தொடர்ச்சியான மூன்று ஆண்டு பணிக்காலத்தில் இரண்டாண்டுகள் தகுதிகாண் பருவம் நிறைவு செய்யப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஒம்/- சு. சாந்த குமார்,
மாவட்ட வருவாய் அலுவலர்,
ஈரோடு.

// உண்மை நகல் உத்தரவுப்படி //

அலுவலக மேலாளர் (பொது)

பெறுநர்

திருமதி. எஸ்.கனிமொழி,
முதுநிலை வருவாய் ஆய்வாளர்,
வட்டாட்சியர் அலுவலகம், கோபிசெட்டிபாளையம். - உரிய வழிமுறையாக

நகல் : வருவாய் வட்டாட்சியர், கோபிசெட்டிபாளையம்.
நகல் : அ4 இருப்புக்கோப்பிற்கு.